சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 4439 /அ1/2022, நாள். 04.07.2022.

பொருள்: புகார் - சென்னை மாவட்டம் - மாணவர்கள் வகுப்பறைகளில் கைபேசி (Cell Phone) உபயோகிப்பது தவிர்த்தல் மற்றும் பள்ளி வளாகத்தினுள் மாணவர்கள் நற்பண்புகளுடன் நடந்து கொள்வதை உறுதி செய்வது குறித்து பின்பற்றிட வேண்டிய அறிவுரைகள் - தொடர்பாக.

பார்வை: பெற்றோர்களிடமிருந்து தொடர்ந்து பெறப்படும் புகார்கள்.

மேற்காண் பொருள் சார்பாக பெற்றோர்களிடமிருந்து தொடர்ந்து பெறப்படும் புகார்கள் சார்பாக, பின்வரும்அறிவுரைகளை தவறாக பின்பற்றிட சென்னை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. மாணவர்களின் பெற்றோர்களுக்கு தங்களது குழந்தைகள் பள்ளிக்கு கைபேசி கொண்டு செல்வதை அனுமதித்திட கூடாது என்றும் கைபேசி கொண்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டால் எக்காரணம் கொண்டும் திருப்பி வழங்கப்படமாட்டாது என்ற விவரத்தினையும் பெற்றோர்களுக்கு தெரிவித்திடல் வேண்டும்.
2. பள்ளிக்கு வருகை தரும் மாணவ-மாணவிகள் கைபேசி கொண்டு வருவதனை தடுத்திடும் வகையில் வகுப்பு ஆசிரியர்களால் வாரத்தில் இரு முறை சுழற்சி அடிப்படையில் சோதனை செய்திடல் வேண்டும். .
3. அரசுப் பேருந்துகளில் மாணவர்கள் பயணிக்கும் போது படிக் கட்டில் நின்று பயணம் செய்வது / பேருந்தில் ஒழுங்கீனமாக நடந்து கொள்வதை தவிர்த்திடும் வகையில் போதிய அறிவுரைகளை வழங்கிட வேண்டும்.
4. பள்ளி வகுப்பறையில் ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் அமர்ந்திருப்பதை தவிர்த்திடும் வகையில் விடுப்பில் உள்ள ஆசிரியர்களுக்கு பதிலாக பணிக்கு வருகை தந்துள்ள ஆசிரியர்களுக்கு பாடவேளைகள் ஒதுக்கீடு செய்து அதனை தொய்வின்றி நடைமுறைப்படுத்திடல் வேண்டும்.
5. உணவு இடைவேளையின் போது மாணவ/ மாணவியர்கள் சுத்தமான, பாதுகாப்பான இடத்தில் தனித்தனியாக அமர்ந்து உணவு உண்ணுவதை உறுதி செய்திடும் பொருட்டும், பள்ளி வளாகத்தில் மாணவ/மாணவிகள் நற்பண்புகளுடன் நடந்து கொள்வதினை உறுதி செய்திடும் பொருட்டும் கண்காணிப்புப் பணிக்கு ஆசிரியர்களை ஈடுபடுத்திடல் வேண்டும்.
6. தனியார் வாகனங்களில் வருகைபுரியும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் தனியார் வாகன ஓட்டுநர்களுக்கு பள்ளி நிருவாகத்தினால் உரிய அறிவுரைகள் வழங்கிட வேண்டும்.
7. பள்ளி நிருவாகம் சார்பில் பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதற்கென தனியாக ஒரு பொறுப்பாளரை நியமனம் செய்திடல் வேண்டும்.

8. மாணவர்கள் பள்ளிக்கு மிதிவண்டியில் வருகை தரும் மாணவர்களது மிதிவண்டிகளை பள்ளிக்கு அருகாமையில் உள்ள குடியிருப்பு வாசிகளுக்கு எவ்வித இடையூறும் இன்றி பள்ளி வளாகத்தினுள் நிறுத்திட நடவடிக்கை எடுத்திடல் வேண்டும். மாணவர்கள் மிதிவண்டிகளை எடுத்து கலைந்து செல்லும் போது எவ்வித அசம்பாவிதங்களுக்கும் இடம் அளிக்கா வண்ணம் முறையாக நடந்து கொள்வதனை உறுதி செய்திடல் வேண்டும்.

9. பள்ளி நேரம் முடிவடைந்த பின்பு ஒவ்வொரு வகுப்பறைகளை மூடுவதற்கு முன்பும் அறைகளில் எவரும் இல்லை என்பதனை உறுதிசெய்து கொள்ளவேண்டும்.

10. மாணவர்கள் பள்ளியின் தளவாடச் சாமான்கள் மற்றும் பிற பொருள்களை சேதம் ஏற்படுத்தா வண்ணம் உடற்கல்வி ஆசிரியர்களைக் கொண்டு கண்காணித்திடல் வேண்டும்.

11. எவ்வித தகவலும் இன்றி தொடர்ந்து மூன்று நாட்கள் பள்ளிக்கு வருகை புரியாத மாணவர்களது விவரம் குறித்து அவர்களின் பெற்றோர்களிடம் நேரில் விசாரணை மேற்கொண்டு உரிய தகவல்களை பெற்று தனியாக விவரப் பதிவேடு வகுப்பு ஆசிரியரால் பராமரித்திடல் வேண்டும்.

12. மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையிலும் ஒழுக்கத்தினை மேம்படுத்துவது குறித்தும் மேற்காண் நடைமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்படும் என்ற விவரத்தினை மாணவ/மாணவியர்களின் பெற்றோர்களுக்கு தெரிவித்திடல் வேண்டும்.

மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் சார்ந்த செயல்பாடுகளில் எவ்வித சமரசத்திற்கும் இடம் அளிக்காமல் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும் என பள்ளி நிருவாகம் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

04/07/22

பெறுநர்

1. அனைத்து வகைப் பள்ளிகளின் தாளாளர்கள் / செயலர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை-06, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை-06, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. கல்வி அலுவலர், சென்னை பள்ளிகள், பெருநகர சென்னை மாநகராட்சி.
5. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் / வட்டாரக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.